(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 123.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011 செத்தெம்பர் 20, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0454/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) இலங்கை சனாதிபதி 2010, யூன் 8 முதல் 10 வரையான காலப்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த போது, தமிழ் மக்களுக்காக 50,000 வீடுகளைக் கட்டுவதற்கு 24 பில்லியன் ரூபாவினை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் இணங்கியதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி இற்றைவரையில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையினையும்;

(ii) அவை கட்டப்பட்டுள்ள இடங்களையும் அவற்றைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்களையும்;

(iii) வீடுகளின் நிர்மாணத்திற்கு முன்னதாக வழங்கப்பட்ட இந்தியாவினால் வழங்கப்பட்ட பணத்தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) புதிய வீடுகளை வழங்குவதற்காக உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரைத் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் அடிப்படையையும்;

(ii) அவர்கள் தமிழர்களா, முஸ்லிம்களா அல்லது சிங்களவர்களா என்பதையும்;

(iii) உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் குடியமர்த்துவதற்கு இன்னும் தேவைப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கையையும்

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0862/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நூல் வெளியீட்டு உதவிக் கருத்திட்டம் எனப்படும் எழுத்தாளர் உதவிக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) ஆரம்பம் தொடக்கம் இன்றுவரை மேற்படி கருத்திட்டத்திற்காக ஒவ்வொரு வருடத்திற்கும் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் உதவியைப் பெற்றுக்கொண்ட எழுத்தாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கேற்ப யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி கருத்திட்டத்தின் செயற்படுநிலை யாதென்பதையும்;

(ii) எழுத்தாளர்களுக்கு மாபெரும் உறுதுணையாகவிருந்த இக்கருத்திட்டம் அடிக்கடி செயலிழப்பதைத் தடுப்பதற்கான நிரந்தர அடித்தளமொன்றை இடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், எத்திகதியில் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0880/ '10

3.

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (6)

(அ) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை சட்டக் கல்லூரியின் மொத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும்,

(i) விரிவுரைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பரீட்சையின் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வேறு வழிகளில் இலங்கை சட்டக் கல்லூரிக்கு கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(v) இலங்கை சட்டக் கல்லூரியின் செலவினம் எவ்வளவென்பதையும்

தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை சட்டக் கல்லூரியின் நிதி முகாமைத்துவத்தை ஒழுங்கு முறைப் படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டுக்கான நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விரிவுரைக் கட்டணங்களை அதிகரிக்காது இலங்கை சட்டக் கல்லூரியின் நடவடிக்கைகளைப் பேணிவர முடியாதாவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1152/ '11

4.

கௌரவ புத்திக பத்திரண,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புடவைகள் பங்குச் சபையை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அந்த நிறுவனத்துக்கு சொந்தமான சொத்துக்களை வேறு நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்க அல்லது விற்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அந்த சபைக்கு சொந்தமாக தற்போது உள்ள மொத்த சொத்துக்களின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iv) தற்போது அந்த நிறுவனத்தில் பணியாற்றும் நிரந்தர மற்றும் அமைய ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) புடவைகள் பங்குச் சபை மூடிவிடப்படுமெனில் அங்கு பணியாற்றிய ஊழியர்கள் பலர் பெரும் பொருளாதார சிரமங்களை எதிர் நோக்குவார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனின் மேற்படி ஊழியர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் எவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1165/ '11

5\.

கௌரவ அநுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 1980 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் வரை அரச ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள விதம் வருடாந்த ரீதியில் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) இக்காலப்பகுதியில் வாழ்க்கைச் செலவு சுட்டெண் அதிகரித்துள்ள விதம் வருடாந்த ரீதியில் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அதிகரிக்கின்ற வாழ்க்கைச் செலவுக்கு ஒப்பீட்டளவில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

1265/ '11

6\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நுகர்வோர் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக நுகர்வோர் நலன்புரி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0645/ '10

7\.

கௌரவ ரவி கருணாநாயக்க,—தொழில், தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) தனியார் துறைக்குரிய குறைந்தபட்ச சம்பளங்கள் எப்போது அதிகரிக்கப்படுமென்பதையும்,

(ii) தனியார் துறை சார்ந்த பல்வேறு துறைகளுக்கு அதிகரிக்கப்படவுள்ள சம்பளத்தொகை இலங்கை ரூபாவில் எவ்வளவு என்பதை வெவ்வேறாகவும்,

(iii) கடந்த பத்து வருடங்களில் தனியார் துறை ஊழியர்களின் சம்பளங்கள் கடைசியாக அதிகரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரச துறைச் சம்பளம் எப்போது அதிகரிக்கப்படவுள்ளது என்பதையும்,

(ii) அதிகரிக்கப்படவுள்ள தொகையையும்,

(iii) அரசதுறையிலுள்ள பல்வேறு துறைகளுக்குரித்தான குறைந்தபட்ச ஓய்வூதியத்துடனான சம்பளத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1153/ '11

8\.
கௌரவ புத்திக பத்திரண,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படவேண்டிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த புனித தலங்களாக இது வரை இலங்கையினுள் உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பௌத்த மத புனித தலங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி இடங்களின் பெயர்கள், முகவரிகள், மற்றும் அந்த ஒவ்வொரு இடமும் பிரகடனப்படுத்தப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி மற்றும் வர்த்தமானி இலக்கம் மாவட்ட அடிப்படையில் வெவ்வெறாக யாவை என்பதையும்;

(iii) தற்போது மேற்படி பௌத்த புனித தலங்களை பாதுகாக்க ஏதேனும் முறைமையியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அந்த முறைமையியல் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1179/ '11

9\.
கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைத் தலைவரின் முழுப்பெயர் மற்றும் வயது யாது என்பதையும்;

(ii) இவரை நியமித்த அதிகாரி யார் என்பதையும்;

(iii) இத் தலைவர் இதற்கு முன்பு பணிபுரிந்த இடம் மற்றும் பதவி யாது என்பதையும்;

(iv) இவரின் தொழில் சார் அனுபவம் யாது என்பதையும்;

(v) இவரின் மாதாந்தச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1266/ '11

10\.
கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உணவு பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக உணவு பாதுகாப்பு அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1608/ '11

11.

கௌரவ அஜித் பீ.பெரேரா,— உள்ளூராட்சி,மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின் கெஸெல்வத்த, திக்கல இறங்குதுறைக்கும் கொழும்பு மாவட்டத்தின் பிலியந்தல முனைக்கும் இடையே ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட படகுப் பாதை பண்டாரகம, ஹிரண இறங்குதுறையிலிருந்து திக்கல இறங்குதுறைக்கு எடுத்துவரப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி படகுப் பாதையை இதுவரை பயன்பாட்டில் ஈடுபடுத்த முடியாமற் போனமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி படகுப் பாதை போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படுவதை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

(iv) படகுப் பாதை பயன்படுத்தப்படுவதற்காக இலக்கிடப்பட்ட திகதியொன்று இல்லாவிட்டால் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1154/ '11

12.

கௌரவ புத்திக பத்திரண,— நீர்ப்பபாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவில் ஊரவ ஆற்றை தென்கந்தெலிய கிராமத்தில் இடைமறித்து, அணையொன்றை நிர்மாணித்து அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு நீர் வழங்கும் திட்டமொன்று உள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) அவ்வாறாயின், குறித்த கருத்திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) அதற்குச் செலவிட மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்கான நிதி எவ்வாறு பெறப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மேற்குறிப்பிட்ட இடத்திற்கு மேலதிகமாக, ஊரவ ஆற்றின் கீழ்ப் பகுதியில் அம்பனாகல கிராமத்திலும் அணையொன்றை நிர்மாணிப்பதற்கான நில அளவைப் பணிகள் நடைபெற்று வருகின்றதென்பதையும்;

(ii) அதன் பிரகாரம் குறித்த கருத்திட்டத்திற்கான நிலையான இடம் சம்பந்தமாக பிரதேச மக்களிடையே நிலவும் சந்தேகத்தால் சுமார் 10 ஆண்டுகளாக நிலையான பயிர்ச்செய்கைகளும் வீடமைப்புப் பணிகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) தற்போது மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்படும் நிலையான இடம் பற்றி தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த இடம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1180/ '11

13.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் விசேட கருத்திட்டங்களின் கீழ் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான, தெரிவுசெய்யப்பட்ட தோட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட விசேட கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இந்த ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் செலவு செய்யப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இந்த ஒவ்வொரு கருத்திட்டத்தின் கீழ் இன்றுவரை ஈட்டிய பணத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இந்த ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் தற்போதைய நிலைமை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1188/ '11

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கோதுமை மாவின் கடந்த 5 வருடங்களுக்கான,

(i) மொத்த நுகர்வையும் அதன் தலாவீத நுகர்வையும்;

(ii) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட தொகையையும்;

(iii) இலங்கையில் கிலோ ஒன்றுக்கான உற்பத்திச் செலவையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட தொகையையும்;

(v) இறக்குமதி செய்யப்பட்ட தொகையின் பெறுமதியையும்

வருடாந்த அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இறக்குமதி செய்யப்படும் மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் ஒரு கிலோ கோதுமை மா மீது விதிக்கப்படும் எல்லா வரிகளையும் (நேரடி மற்றும் மறைமுக) தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1267/ '11

15.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கிராமிய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக கிராமிய அலுவல்கள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்கள்

1.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர்,— நொத்தாரிசுகள் (திருத்தம்),— நொத்தாரிசுகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

2.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர்,— ஆவணங்கள் பதிவு (திருத்தம்),— ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 7ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 யூன் மாதம் 29 ஆந் திகதிய 1660/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 மார்ச்சு மாதம் 24 ஆந் திகதிய 1646/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 மார்ச்சு மாதம் 24 ஆந் திகதிய 1646/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.4),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதிய 1589/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.5),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 1617/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.6),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிய 1694/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற சேவையின் சுயாதீனப்பண்பை வலுப்படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,— 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளாலும் மற்றும் 2010.10.06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், தெரிகுழுவானது ஏழு (07) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

* 8.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

பணம் தூய்தாக்கல் தடை (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 10

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 11

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ ஆம் பிரிவின் கீழ் நிதி திட்டமிடல் அமைச்சரினால் உற்பத்தி வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 யூன் 01 ஆம் திகதிய 1708/21 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சரால் செஸ் வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 யூலை 01 ஆம் திகதிய 1712/23 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 16.

கரையோரம் பேணல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 17.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 18.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 19.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 20.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 21.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 22.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 23.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 24.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 25.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 26.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 27.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 28.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 29.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 30.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

31.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

32.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1631/ ’11

1.

கௌரவ ரஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ், விண்ணப்பமொன்று விடுக்கப்பட்டதன்பேரில் அவ்விண்ணப்பத்தின் மீது விசாரணை முடிவடையும் வரையில் நீதிமன்றம் இடைக்கால பாதுகாப்பு உத்தரவு ஒன்றை பிறப்பிக்கவேண்டும் என்பதையும்;

(ii) அத்தகைய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் அவ் விண்ணப்பம் மீது விசாரணை மேற்கொள்வதற்கான ஓர் உத்தரவை நீதிமன்றம் வழங்க வேண்டும் என்பதையும்;

(iii) ஓர் இடைக்கால பாதுகாப்பு உத்தரவு 12 மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு அமுலில் இருக்க வேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) விசாரணை மேற்கொள்ளப்படாத மற்றும் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குப் பின்னர் விசாரணை மேற்கொள்ளப்பட்ட வழக்குகளையும்;

(ii) சட்டத்தைப் பிரயோகிக்கத் தவறிய நீதிவான்களை வழிநடத்துவதற்கு மேற்கொள்ளப்படும் பரிகார நடவடிக்கையையும், தாமத்தால் பாதிக்கப் பட்டோருக்கான நட்டஈட்டையும்;

(iii) இடைக்கால உத்தரவொன்றிக்கான இறுதிக் திகதியொன்று காணப்படாத பட்சத்தில் இடைக்கால உத்தரவு சாரா கட்டளையொன்றிக்கு இறுதித் திகதி யொன்று பெற்றுக்கொள்வதன் காரணங்களையும்;

(iv) மேற்படி முரண்பாட்டை சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1632/ '11

2.

கௌரவ ரஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1841 ஆம் ஆண்டின் அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2001 ஆம் வருடம் முதல் இற்றை வரை கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களது எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களுள் இன்றும் சிறையில் அல்லது வேறு இடங்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களது எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'திருத்த முடியாத போக்கிரி' (Incorrigible rogues)என்பதன் அர்த்தம் என்னவென்பதையும்;

(ii) அச்சொல் எந்நோக்கத்தின் அடிப்படையில் பிரயோகிக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) தெருச்சுற்றி கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள், அது அவ்வாறு பிரயோகிக்கப்பட வேண்டும் போன்றன தொடர்பாக 2004 ஆம் ஆண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் விதப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்குறிப்பிடப்பட்ட விதப்புரைகளை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறு இல்லையெனில், அக்கட்டளைச் சட்டத்தின் கீழான நடைமுறைகள் சீர்செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்துகொள்வதற்கு மேற்கொள்ளப்படவுள்ள ஏனைய நடைமுறைகள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?